**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC.221/2013 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.3 |
| Name : | செல்லம்மாள் |
| Father's Name/Husband Name: | ரவி |
| Village : | வெம்பாவூர் பிரிவு, கட்ராங்குளம் |
| Taluk : | வேப்பந்தட்டை |
| Age : | 25/ 2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 03.06.2025

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. B. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**
**(எதிரி – ஆஜர் )**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் டிப்ளோமோ நர்ஸிங் முடித்துவிட்டு கோயம்பத்தூரில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோரை தெரியும். அவர்கள் எனது சித்தப்பா மற்றும் சித்தி ஆவார்கள். 22.07.2012 அன்று மாலை 4.00 மணியளவில் அ.சா.2யை அ.சா.1 கிருஷ்ணாபுரத்தில் உள்ள மருத்துவரிடம் அழைத்து சென்றுவிட்டு, திரும்ப வரும்போது அ.சா.2யை வெம்பாவூர் பிரிவு ரோட்டில் நிர்க்க வைத்து விட்டு எனது வீட்டிற்கு தண்ணீர் வாங்குவதற்காக வந்து என்னிடம் தண்ணீர் கொண்டுவருமாக சொல்லிவிட்டு தன்னுடைய வாகனத்திற்கு பெட்ரோல் போட சென்றுவிட்டார். நான் அ.சா.2க்கு தண்ணீர் கொடுத்துவிட்டு நின்று பேசிக்கொண்டிருக்கும்போது ஆஜர் எதிரி வந்து என்னை கட்டி பிடித்து முத்தம் கொடுத்தார். அதை தடுத்த அ.சா.2யை ஆஜர் எதிரி தேவடியா, நீங்களும் நல்ல இருக்கீங்க வாங்க என சொல்லி எட்டி உதைத்தார். அப்போது அ.சா.1 வந்து தடுத்த

போது அவரை தேவடியா பயளே என அசிங்கமாக திட்டினர். பின்னர் எதிரி கல்லால் அ.சா.1யை மண்டையில் அடித்துவிட்டார். அப்போது சண்டையை விலக்க வந்த செல்லப்பிள்ளை என்பவரை தேவடியா புண்ட, நீயாருட என்ன கேக்கரதுக்கு நான் அப்படிதாண்ட பன்னுவ என அசிங்கமாக திட்டி அவரையும் எதிரி கல்லால் தலையில் அடித்துவிட்டார். பிறகு 108 ஆம்புலன்ஸ் வரவழைத்து பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தோம். போலீசார் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2(i)சம்பவம் நடந்தபோது எனக்கு என்ன வயது இருக்கும் என்றால் 13 வயது. சம்லவம் நடந்த போது போலீசார் என்னை தனிப்பட்ட முறையில் விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. நான் போலீசாரிடம் வாக்குமூலமோ அல்லது புகாரோ கொடுத்தேனா என்றால் நான் கொடுக்கவில்லை. சம்பவத்திற்கு பிறகு நான் 108 ஆம்புலன் மூலம் வரவில்லை என்றால் சரியல்ல. நான் 108 ஆம்புலன்சில் வந்தேன். எத்தனை நாட்கள் சிகிச்சையில் இருந்தார்கள் என்றால் 4 நாட்கள் இருந்தார்கள். அ.சா.1 முதல் 2 எனது சித்தப்பா, சித்தி என்பதால் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவர்களுக் ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தற்போது கூறிய சங்கதிகளை போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் இருந்தபோது சொன்னேன். எனது சித்தி குடும்பத்திற்கும், எதிரிக்கும் முன்விரோம் உள்ளது என்றால் சரியல்ல. சம்பவம் நடந்தபோது எனது சித்தப்பா, சித்தி என்னுடன் இருந்தார்கள் என்றால் சித்தி இருந்தார் சித்தப்பா 5 நிமிடம் கழித்து வந்தார். எனது சித்தி அருகில் இருந்தபோது இப்படி ஒரு சம்பவம் நடக்க வாய்ப்பிள்ளை என்றால் சரியல்ல. எனது சித்தாப்பா, சித்திக்கும், எதிரக்கும் முன்விரோம் இருந்தது என்றாலும், எதிரிக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை

Typed to my dictation in open court in
the presence of Witness and read over
to the witness and admitted by the
witness to be correct.
Sd/-

Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC.221/2013 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.4 |
| Name : | அரசி |
| Father's Name/Husband Name: | செல்லப்பிள்ளை |
| Village : | கிருஷ்ணாபுரம் |
| Taluk : | வேப்பந்தட்டை |
| Age : | 50/ 2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 03.06.2025

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. B. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**
**(எதிரி – ஆஜர் )**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். ப.சா.3 எனது கணவர் ஆவார். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அ.சா.1 முதல் அ.சா.3 வரையானோரை சம்பவத்தன்று எனக்கு தெரியாது. அதற்கு பின்பு ஆஜர் எதிரி அ.சா.1யும் அ.சா.2யும் தெரியும். கடந்த 13 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் ஆஜர் எதிரி சிவக்குமாரையும், கொளஞ்சியையும் அடித்ததாகவும், அப்போது எனது கணவரை கல்லால் குத்தியதாகவும், அருகில் தகவல் சொன்னதன் பேரில் நான் அந்த இடத்தில் சென்று பார்த்தபோது, 108 ஆம்புலன்சில் பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றுவிட்டார்கள். மருத்துவமனயைில் சிகிச்சையில் இருந்த எனது கணவரிடம் இதுப்பற்றி விசாரித்தபோது, மேற்படி விபரங்களை கூறினார். இந்த வழக்கு சம்பந்தமாக வேறு எதுவும் தெரியாது. போலீசார் இதுப்பற்றி என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2(i)இந்த வழக்குப்பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். இந்த சம்பவம் நடந்து எத்தனை நாட்கள் கழித்து போலீசார் என்னை விசாரித்தனர் என்றால் சம்பவத்தன்று மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். நான் தற்போது கூறிய சங்கதிகளைதான் போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் இல்லை. போலீசார் எனக்கு சொல்லிக்கொடுத்தார்களா என்றால் இல்லை. அ.சா.1, அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர் எனது ஊரைச்சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். அ.சா.1 முதல் 3 வரையிலானோர் எனது ஊர்க்காரர்கள் என்பதால் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவர்களுக் ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை. எனது கணவரை எதிரி திட்டவுமில்லை, தாக்கவுமில்லை என்றாலும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-

Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.